உ
சிவ சிவ

ESTD.1813
Reg. No. 1177/1964-65

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம்

2025 ஆம் ஆண்டு காசி சத்திரம் மூலம் நடைபெறும் திருவிழாக்களின் அழைப்பிதழ்கள்

உ
சிவ சிவ

ESTD.1813
Reg. No. 1177/1964-65

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம்

3, மேற்கு வடம்போக்கித் தெரு, காரைக்குடி - 630 001.
போன் : 04565 220 501, செல் : 84890 00025

பழனி சத்திரம் 5ஆம் ஆண்டு
தைப்பூச விழா அழைப்பிதழ்

அன்புடையீர்,

பழனி ஆண்டவர் ஸ்ரீ காசி விஸ்வநாதர், விசாலாட்சி, அன்னபூரணி திருவருளை முதற்கொண்டு குரோதி வருடம் தை மாதம் 28 முதல் மாசி 2ஆம் தேதி வரை (10.02.2025 முதல் 14.02.2025 வரை) ஆகிய தேதிகளில் **தைப்பூச விழா** நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உள்ளது.

அதுசமயம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து, விழாவை சிறப்பிக்கச் செய்து ஸ்ரீ காசி விஸ்வநாதர் விசாலாட்சி, அன்னபூரணி, பழனி ஆண்டவர் திருவருளைப் பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

11.02.2025 ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு மங்கள பொருட்கள் ஏலம் நடைபெறும்.

ஐந்து தினங்களிலும் மூன்று வேளை உணவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

இப்படிக்கு
2023 - 2026
காசி சத்திர நிர்வாகக் குழு
மற்றும்
செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்

உ
சிவ சிவ

ESTD.1813
Reg. No. 1177/1964-65

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம்

காசியில் சிவன் ராத்திரி விழா

அன்புள்ள செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகரத்தார் பெருமக்களுக்கு வணக்கம்.

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகர சத்திர மேலாண்மைக் கழக நிர்வாகத்தின் நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக!

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகர சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு பாத்தியப்பட்ட காரைக்குடி தலைமை அலுவலகம், சென்னை, பழனி, மதுரை, தேவிப்பட்டினம், ஸ்ரீ காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, கல்கத்தா, தாரகேஸ்வரம், நாசிக் முதலிய சத்திரங்கள் சீரோடும் சிறப்போடும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. காசியில் **சிவன் ராத்திரி விழா** குரோதி வருடம் மாசி மாதம் 12ஆம் தேதி முதல் 15ஆம் தேதி வரை (24.02.2025 முதல் 27.02.2025 வரை) மிகச் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

24.02.2025 திங்கட்கிழமை – விசாலாட்சி கோவிலில் மாலை 6.00 மணிக்கு திருவிளக்குப் பூஜை நடைபெறும்

25.02.2025 செவ்வாய்க்கிழமை – நமது சத்திரத்தில் மாலை 6.00 மணிக்கு திருவிளக்குப் பூஜை நடைபெறும்

26.02.2025 புதன்கிழமை – காலை 11.00 மணிக்கு மங்கல பொருட்கள் ஏலம் நடைபெறும்.
சிவராத்திரி அன்று சம்போவுடன் விஸ்வநாதர் கோவிலுக்கு தரிசனத்திற்கு செல்லுதல்.

27.02.2025 வியாழக்கிழமை – சத்திரத்திலிருந்து மதியம் 4.30 மணிக்கு பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு நடைபெறும்.

நமது சத்திரத்தில் 25.2.2025 செவ்வாய்க்கிழமை ஸ்ரீ சொர்ணலிங்கம், தங்க விசாலாட்சி தங்க அன்னபூரணி எழுந்தருள செய்யப்படும்.

நகரத்தார் பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு காசிவிஸ்வநாதரின் அருளைப் பெறுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

2023 - 2026

காசி சத்திர நிர்வாகக் குழு

மற்றும்

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்

ஸ்ரீ ராமஜெயம்

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம்

21/2/7, Mohalla Baboo Bazar, Ayodhya - 224123 (U.P)

அயோத்தியாவில் தேரோட்டத் திருவிழா அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்!

மெய்யான சத்யம், உண்மையான அறம் இவற்றின் நாயகரான ஸ்ரீ இராமபிரான் அவதார பூமியும், இயற்கை எழில்சூழ சரயூ நதிக்கரையில் அமைந்துள்ளதுமான அயோத்தி மாநகரில் தேரோட்டம் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

மேற்படித் **தேரில் சீதாப்பிராட்டியாரோடு ஸ்ரீராம பிரான், லெட்சுமணன், பரதன், சத்ருக்கனன்** மற்றும் **அனுமன்** உள்ளிட்ட பரிவார மூர்த்திகளோடு இறையருள் நிச்சயித்தவாறு ஸ்ரீராம நவமி நன்னாளில் குரோதி வருடம் பங்குனி மாதம் 23ஆம் தேதி (06.04.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 6.45 மணியளவில் நமது நகர விடுதியில் இருந்து வலம் வரவுள்ளார். இந்த நிகழ்வுகளில் நகரத்தார் பெருமக்கள் அனைவரும் கலந்துகொண்டு ஸ்ரீ ராமபிரான் அருள்பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு பெற வேண்டி அன்புடன் அழைக்கிறோம்.

இப்படிக்கு

2023 - 2026

காசி சத்திர நிர்வாகக் குழு

மற்றும் **செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்**

நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தேதி	ஆங்கிலத்தேதி	நேரம்	நிகழ்ச்சி
குரோதி வருடம் பங்குனி மாதம் 22ஆம் தேதி	05.04.2025 சனிக்கிழமை	காலை 7.00 - 8.00 மணி	அனுஞ்கை, விக்னேஷ்வர பூஜை, கணபதி ஹோமம், சுதர்ஸன ஹோமம், அபிஷேகம், அலங்காரம் நடைபெற்று தீபாராதனைகள் நடைபெறும்.
பங்குனி மாதம் 23ஆம் தேதி	06.04.2025 ஞாயிற்றுக்கிழமை	காலை 6.45 மணி	**சுவாமி ரதத்திற்கு** எழுந்தருளல்
		9.00 – 10.00 மணி	**ரத ஊர்வலம்**

உ
சிவ சிவ

ESTD.1813
Reg. No. 1177/1964-65

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திரம் மேலாண்மைக் கழகம்

கல்கத்தாவில் பங்குனி உத்திர திருவிழா

குரோதி வருடம் பங்குனி மாதம் 27ஆம் தேதி முதல்
30 ஆம் தேதி வரை 10.04.2025 முதல் 13.04.2025 வரை
மிகச் சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது

1. **10.04.2025** - வியாழக்கிழமை அன்று காவடி கட்டுதல், திருப்புகழ் பாராயணம், விளக்கு பூஜை, வேல் பூஜை, மங்கல பொருட்கள் ஏலம் நடைபெறும்.
2. **11.04.2025** - வெள்ளிக்கிழமை அன்று பால் குடம், காவடி புறப்பட்டு ஸ்ட்ராண்ட் ரோடு வழியாக சிங்கார முருகேசர் கோவிலுக்கு செல்லுதல்.
3. **12.04.2025** - சனிக்கிழமை அன்று தாரகேஸ்வரம் சென்று சாமி தரிசனம் செய்வது.
4. **13.04.2025** - ஞாயிற்றுக்கிழமை அன்று காளிகாட்டில் அமைந்துள்ள நமது சத்திரத்திற்கு சென்று, பிறகு காளி கோவில் மற்றும்பிற இடங்களை சுற்றிப்பார்ப்பது.

நகரத்தார் பெருமக்கள் விழாவில் கலந்து கொண்டு சிங்கார முருகேசர் அருள் பெற்று விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. **09.04.2025** தேதி மாலையில் இருந்து **13.04.2025** தேதி வரை தங்குவதற்கும் மற்றும் சாப்பாடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
2. கல்கத்தா பங்குனி உத்திரத்திற்கு வரும் நகரத்தார்கள் காரைக்குடி தலைமை அலுவலக செல் நம்பர் **84890 00025**க்கும் மற்றும் **04565 - 220501** போன்க்கும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்க வேண்டியது.
3. கல்கத்தாவில் தொடர்பு கொள்ள வேண்டிய செல் நம்பர்கள் : **90254 68501 / 73111 66246**

இப்படிக்கு
2023 - 2026
காசி சத்திர நிர்வாகக் குழு
மற்றும்
செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்



உ
சிவ சிவ

ESTD.1813
Reg. No. 1177/1964-65

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகம்

அன்புள்ள செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வணக்கம்,

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு பாத்தியப்பட்ட காரைக்குடி தலைமை அலுவலகம் சென்னை, பழனி, மதுரை, தேவிப்பட்டிணம், ஸ்ரீ காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, கல்கத்தா, தாரகேஸ்வரம், நாசிக் முதலிய சத்திரங்கள் சீரோடும் சிறப்போடும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

காசி மிட்டாய்த் திருவிழா

18.10.2025, சனிக்கிழமை
விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 1ம் தேதி
– மாலை 5.00 மணிக்கு விசாலாட்சி கோவிலில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

19.10.2025, ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 2ம் தேதி
– காலை 7.00 மணிக்கு சத்திரத்தில் இருந்து சிக்ரா அண்ணாமலையாருக்கு பால்குடம் எடுப்பதும் மற்றும் அபிஷேகமும் நடைபெறும்.

19.10.2025, ஞாயிற்றுக்கிழமை
– காலை 11.00 மணிக்கு சிக்ரா நந்தவனத்தில் உள்ள அண்ணாமலையார் கோவிலில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

20.10.2025, திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 3ம் தேதி
– தீபாவளி காலை 7.00 மணிக்கு நகரேஸ்வரர் நகரேஸ்வரிக்கு அபிஷேகம் நடைபெறும்.
காலை 10.00 மணிக்கு சத்திரத்தில் மங்கல பொருட்கள் ஏலம் நடைபெறும்.
அன்று மாலை 6.00 மணிக்கு சத்திரத்தில் திருவிளக்கு பூஜை நடைபெறும்.

19.10.2025 - 21.10.2025 ஆகிய மூன்று தினங்களிலும் மாலை 6.00 மணியில் இருந்து இரவு 8.30 மணி வரை நமது சத்திரத்தில் அமைந்துள்ள நகரேஸ்வரர் கோவிலில் தங்க விசாலாட்சி ஸ்ரீ சொர்ணலிங்கம் எழுந்தருள செய்யப்படும்.

இப்படிக்கு
2023 - 2026
காசி சத்திர நிர்வாகக் குழு

உ
சிவ சிவ

ESTD.1813
Reg. No. 1177/1964-65

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகம்

அன்புள்ள செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கு வணக்கம்,

ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திர மேலாண்மைக் கழகத்திற்கு பாத்தியப்பட்ட காரைக்குடி தலைமை அலுவலகம் சென்னை, பழனி, மதுரை, தேவிப்பட்டிணம், ஸ்ரீ காசி, கயா, அலகாபாத், அயோத்தியா, கல்கத்தா, தாரகேஸ்வரம், நாசிக் முதலிய சத்திரங்கள் சீரோடும் சிறப்போடும் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

நாசிக் கார்த்திக் பூர்ணிமா

4.11.2025 செவ்வாய்கிழமை இரவு 10.37 pm முதல் **5.11.2025** தேதி புதன்கிழமை மாலை 6.49 pm வரை **பூர்ணிமா.**

கிருத்திகா நட்சத்திரம் 6.11.2025 வியாழக்கிழமை காலை 6.34 am முதல் **7.11.2025** வெள்ளிக்கிழமை அதிகாலை 3.38 am வரை

நகரத்தார் பெருமக்கள் அனைவரும் விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ விஸ்வேஸ்வரர் மற்றும் கார்த்திக் ஸ்வாமி அருள்பெற வேண்டுகிறோம்.

இப்படிக்கு
2023 - 2026
காசி சத்திர நிர்வாகக் குழு

காசியில் புதிய சத்திரம்
திறப்பு விழா தேதி
31.10.2025

நன்றி
வணக்கம்